**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை -மார்ச் 2017**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2017 மார்ச் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 786 | 31,660 |
| பக்கம் தவறியவை | 20 | 836 |
| தரமேம்படுத்தல் | 76 | 3838 |
| மொத்தம் | **890** | **36698** |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- கொக்குவில் அலுவலக கிளையில் இம்மாதம் 325 ஆவணங்கள் 16634 பக்கங்கள் மின்வருடப்பட்டன.
- யாழ்ப்பாண பொது நூலக பத்திரிகை எண்ணிமமாக்கலில் இம்மாதம் 459 ஆவணங்கள் 8640 பக்கங்கள் ஆவணவாக்கப்பட்டுள்ளது
- ஏழாலை களச்செயற்பாட்டில் இம்மாதம் 115 ஆவணங்கள் 8570 பக்கங்களும் ஆவணவாக்கப்பட்டுள்ளது.
- 08 ஆவணங்கள் 364 பக்கங்கள் ஏற்கனவே மின்வருடப்பட்ட பிரதிகளாக இனங்காணப்பட்டுள்ளது. எனினும் இவை வெவ்வேறு சேகரிப்புக்களில் இருந்து பெறப்பட்டவை என்ற காரணத்தினால் மின்வருடப்படுகின்றது. ஆயினும் மேலுள்ள அட்டவணயில் இந்த எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை
- 800 ஆவணங்களுக்கான கட்டுரைகளும், 1500 ஆவணங்களுக்கான பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளது.
- 12 தரமேம்படுத்தல் ஆவணங்களுக்கு கட்டுரை நிர்வாகத்தரவு இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- சேகர அபிவிருத்தியில் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர்களான எம். எஸ். சிறீதயாளன், இந்து சமயப் பேரவை, மயிலங்கூடலூர் பி. நடராசா, பாலவைரவநாதன், கீதாகிருஷ்ணன், ம. சதாசிவம், வி. கந்தவனம், க.சவுந்தரராஜன், இராஜேஸ்வரி, ஆத்மஜோதி நிலையம், சி. என். எச். சாள்ஸ், ஆகியோரது சேகரிப்புக்களும் வெளியீடுகளும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- மார்ச் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

வெளியீட்டாளர்கள்

- ★ நிமிர்வு

எழுத்தாளர்கள்

- ★ சின்னத்தம்பி, அமரசிங்கம்
- ★ இரவீந்திரன், நடேசன்

**காப்புப்படி (Backup)**

- அலுவலக படியிற்கான வன் தட்டுக்களின் ஆயுட்காலத்தினை கருத்திற்கொண்டு நூலக எண் 1 - 32500 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் 2017 இல் கொள்வனவு செய்த புதிய வன் தட்டுக்களில் மாற்றம் செய்யபட்டுள்ளன.

**ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)**

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| **வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| ஒலிச்சேகரம் | 18 |
| படங்கள் சேகரம் | 100 |
| நிகழ்படச் சேகரம் | 9 |

**பயனர் சேவை (User Service)**

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 21,567 பயனர்களால் 245,414 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதில் சராசரியாக நாளொன்றுக்கு 7917 பக்கங்கள் பார்வையிடப்படுகின்றன. 33,694 தடவைகள் பகுப்புக்கள் பார்வையிடப்பட்டுள்ளன.

இம்மாதம் 46.26 % இலங்கை வாசகர்களாலும் 38.57 % இந்திய வாசகர்களாலும் எண்ணிம நூலக வலைத்தளம் கூடுதலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் 57% பெண் வாசகர்களும் 43% ஆண் வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

வாசகர்களில் 54.90% கையடக்கத்தொலைபேசி பயனர்களாகவும் 33.39% கணினி பாவணை பயனர்களாகவும் காணப்படுகின்றனர்.

- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 643 பயனர்களால் 4705 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதில் சராசரியாக நாளொன்றுக்கு 151 பக்கங்கள் பார்வையிடப்படுகின்றன. 1021 தடவைகள் பகுப்புக்கள் பார்வையிடப்பட்டுள்ளன.

**நிர்வாகம் (Administration)**

- கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இயங்கிக்கொண்டிருந்த நூலக நிறுவனம் இம்மாத முடிவிலிருந்து (ஏப்ரல் இருந்து) பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58. தர்மராம மாவத்தை, வெள்ளவத்தை என்ற முகவரியில் தொடர்ந்து இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

**ஆளணி (Human Resource)**

- எண்ணிம ஆவணக உதவி அலுவலராக இம்மாதம் யாழ் அலுவலக கிளையிற்கு இருவர் இணைக்கப்பட்டுள்ளனர்.

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

- மார்ச் மாதத் தேவைகளுக்காக ரூ. 297,736.71 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 226,600.00, வாடகை ரூ. 30,000.00, தொலைபேசி மற்றும் இணையம் 14,350.21 மின்சாரம் 7,926.5 மற்றும் ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.

- மார்ச் மாதம் ஐக்கிய இராச்சியம் அன்பர்கள் ஊடாக ரூ. 380,000.00 மனிதநேயம் அறக்கட்டளை அன்பர்கள் ஊடாக ரூ. 150,000.00 ரூபாவும் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

  இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி